பதிவு எண்—M 5720. வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

466

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் :- இளவழகனார்.

கிளை–6 குருகுலம், மாம்பாக்கம்; விசய, மார்கழி; 8—1—54 தளிர்–12

## குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## வளரும் செல்வம்

சிலர் தேடும் செல்வம், மேல் மேல் பெருகி நன்றாய்ப் பயன் படுகிறது. சிலர் செல்வம், அப்படியின்றி வரவரத் தேய்ந்து போவதுடன், யார்க்கும் பயன்படாமலும் வீணாய்ப் போகிறது. இந்த இரண்டு நிலையும் உலகத்தில் நாம் காண்கிறோம்.

நிலைத்துப் பயன்படுதலும், நிலையாமற் கெட்டுவிடுதலும் என்னும் இவ்விரண்டுக்கும் ஏதாவது காரணம் வேண்டும். பொதுவாக, செல்வம் அழிவுடையது என்றால், மேற் சொன்ன இரு வகையார் செல்வமும் ஒப்ப அழிந்துபோக வேண்டும். ஒருவர் செல்வம் மேல் மேல் வளர்ந்து நன்மை தருவது ஏன்? இன்னொருவர் செல்வம் வர வரத் தேய்ந்து கவலை மிகுப்பது ஏன்? காரணம், செல்வத்தின்பால் இல்லை என்றால், செல்வம் உடையவர்பால் இருக்கவேண்டும் என்றுதானே எண்ணப்படும்?

செல்வத்தைத் தேடும்போது நடுநிலைமையுடன் அதாவது அறமுறைமையில் தேடி, அதனைக் கையாளும்போதும் அற முறைமையிற் கையாண்டு வருதல் சிலர் இயல்பாயிருக்கிறது; சிலர், அச் செப்பம் இல்லாதவராய் இருக்கின்றனர்.

அவரவர் குணங்கள் அவரவரைத் தொடர்கின்றன; அவரவர் பொருள்களிலும் பதிந்துவிடுகின்றன. ஆதலால் அவரவர் காலத்திலும், அவரவர் மரபினர் காலத்திலும், அக் குணங்கள் தத்தம் பயன்களை விளைத்துவருகின்றன. மகிழ்வையும் கவலையையும் உண்டுபண்ணி வருகின்றன; வளர்ந்தும் குறைந்தும் போகின்றன.

மேலும், செல்வம் வளர்வதற்கேற்றபடி அது வலிமையாயிருந்து உதவுதல் முடியும்; அது தேய்வதானால், வலிமை குறைந்து ஊனமுடையதாய்த் தீமைக்கு ஏதுவாகின்றன.

செப்பம் உடையவன் ஆக்கம் நன்மை தரும் என்றால், நடுநிலைமையாய் நடக்கும் அற முறைமையை மக்கள் ஏனோ கை விடுகின்றனர்!

செப்பம் உடையவன் ஆக்கம்,
சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து.

செப்பம் உடையவன் ஆக்கம்- நடுநிலைமையுடையவனது செல்வம், சிதைவு இன்றி எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து- அழிதல் இல்லாமல் தன் வழிவருவார்க்கும் வலியாய் உதவுதல் உடையது.

எச்சத்திற்கும் என்னும் உம்மை, விகாரத்தால் தொக்கது. தனக்கும் ஏமாப் புடைத்து என்பதை அது உணர்த்திற்று. அறத்தால் வருவதாகலின், அத் தன்மைத்தாயிற்று. நடுவு நிலைமையோடு இருப்பார், அற முறைமையிலேயே பொருள் தேடுவாராதலால் அவ்வாறு கூறினார்.

செம்மை நிலை- செப்ப நிலை; ஏமாப்புவலிமை; அதாவது வலிமையால் உதவுதல்; வளரும் செல்வம், ஆக்கம் எனப்பட்டது.

நிலைத்தலும் நன்கு பயன் படுதலும் பண்டங்களின் இயல்பில்மட்டும் இல்லை; அவற்றைக் கையாளும் மக்களுணர்வில் உள்ளது என்றும், நடுநிலைமையுணர்வு அத்தகைய ஆக்கத்தைப் பண்டங்கள் பாற்சேப்பிற்கும் என்றும் தெரிவிப்பார், 'செப்பமுடையவன் ஆக்கம்' என்றார்.

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**6-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(23-10-53 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கிளை | விசய, மார்கழி, | தளிர் |
|---|---|---|
| 6 | 8-1-54 வெள்ளி | 12 |


## கலப்பு மணம்

23-12-1953 அன்று சென்னைச் சட்ட சபையில் தாழ்த்தப்பட்டவர்களின் நலனை உயர்த்துவது குறித்தும் தீண்டாமை ஒழிப்பது குறித்தும், விவாதம் நடந்தது. அதுபோது ஆதித் திராவிடச் சிறுவர்கட்குக் கட்டாய இலவசக் கல்வி அளிப்பதும், இடைவேளையில் பகல் உணவு இலவசமாகத் தருவதும் நன்று என்றும் கூறப்பட்டது. ஓர் உறுப்பினர் அவ் வகுப்பு மாணவர்கள் மட்டும் "செலக்ஷன்" இன்றிப் பள்ளி இறுதித் தேர்வுக்கு அனுப்பப்படல் வேண்டும் என்றும் கோரினார்.

சிற்றூர்களில் வாழும் அரிசனங்களும் பிற தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் பொருளாதாரத்தில் பிற்போக்கடைந்துள்ளனர். மேற்கூறிய சிறிய தீர்மானங்களால் அந்தச் சமூகங்கள் மேனிலை அடைதற்கியலாது. ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட குடிமகனும் தன் வாழ்க்கைச் சகடு உருள்வதற்காகத் தன் ஆண்டையின் தயவையே நோக்கி ஏங்க வேண்டியுள்ளது. இந்த நிலையில் அவன் மகன் படித்துவிட்டால் மட்டும் என்ன வியக்கத் தக்க பலனை எதிர்பார்க்க முடியும்? படிப்பவர்க்கெல்லாம் வேலை கிடைத்துவிட்டால், ஏதோ ஒரு வகையில் ஊதியந்தான். ஆனாலும் அவர்களின் சமூக நிலை அப்படியும் மாற்றமடையப் போவதில்லை. அப்படி இருக்க, படித்தும் வேலையில்லாமல் பழைய நிலையிலேயே இருக்கும் தாழ்த்தப்பட்டோர்கள் கதி என்ன? தன் தகப்பனைப் போலவே ஆண்டையின் முகம் நோக்குவதுதான். இல்லையேல் சென்னை போன்ற பெரிய நகருக்கு ஓடிவருவதும் வேலை தேடி, ஓடி ஓடி, முடியாத காலத்தில் 'ரிக்ஷாவோ'கை வண்டியோ இழுத்துப் பிழைப்பதுதான்.

உண்மையாகவே அவர்கள் நிலையை உயர்த்த வேண்டும் என்னும் அவா தலைவர்கட்கு இருக்குமானால், சட்டத்தின் மூலமும் சலுகையின் மூலமுமட்டும் அவர்களை மேனிலைக்கு நிலையாகக் கொண்டுவர முடியாது. ஏதோ ஓரளவுதான் உயர்த்தலாம். மேல் சாதி கீழ்ச்சாதி என்னும் பேதம் உண்மையிலேயே முட்டாள்தனத்தின் அடிப்படை என்று மக்கள் யாவரும் உணரவும் அதன்படி ஒழுகவுமான 'பிரசார இயக்கத்தை' அரசாங்கம் ஏற்படுத்துவது மிகவும் நல்லது.

பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்களும், தீண்டாமைச் சீர்திருத்தம் முதலியவைகளை மேற்பார்வைக்குக் கடைப்பிடிப்பதாகத் தோற்றினாலும், தனிப்பட்ட முறையில் அவர்களில் சிலர் இத்தகைய பேதத்திற்கு இடம் கொடுக்கின்றனர் என்று அரசவையில் ஓர் உறுப்பினர் கூறியது இங்கு நன்கு கவனிக்கற்பாலது. படித்தவர்கட்குத் தெரியும், இது சமூகக் கேடு மன்பதையின் ஒரு மாசு என்பது. அவர்களே தனிப்பட்ட முறையில் சாதி வேற்றுமை பாராட்டுகிறார்கள் என்றால் நாட்டுப்புறங்களில் வாழும் கல்வி அறிவில்லா மக்கள், பேதங்கள் பார்க்கிறார்கள் என்பது அவர்கள் குற்றமல்ல.

பல நூற்றாண்டுகளாக நம் செந்நீரில் ஊறிய அந்த வேற்றுமையை மிக எளிதில், அரசவையில் பேசிவிடுவதாலோ ஏதோ ஒரு சிறு சலுகை காண்பிப்பதாலோ மட்டும் நீக்கிவிட முடியாது. நிலைத்து நிற்கும் உருப்படியான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். கோயில் நுழைவுக்கு ஒரு சட்டம் இயற்றியதைப் போல் சாதி ஒழிப்புக்கு ஒரு சட்டம் இயற்ற வேண்டும். சட்டத்தை மீறுகின்றவர் பிறகு குற்றவாளிக் கூட்டில் நிறுத்தப்பட்டே ஆகவேண்டும். அப்படியானால் சட்டத்தை மீறும் துணிவு எவர்க்கும் இருக்காது.

'திருடக் கூடாது' இது அறநெறி. ஆனால் அறநெறி என்பதாலா திருட அஞ்சுகிறான் திருடன்? சட்டம் தன்னைத் தண்டிக்குமே என்பதால்தான் அஞ்சுகிறான். எத்தகைய அறநெறியும் நிலைத்துநிற்கவே சட்டம் செய்யப்படுகிறது, அரசினரால். எனவேதான், அறம் (தருமம்) நிலைபெறச் சட்டம் இன்றியமையாததாகிறது.

நம் முதலமைச்சர் அவர்கள் இந்தச் சிக்கலைத் தீர்க்கக் கலப்பு மணந்தான் நன்று எனக் கூறியுள்ளார். கலப்பு மணம் நல்லதுதான். ஆனால் கலப்பு மணம் எவ்வளவு தூரம் இந்த நாட்டில் வெற்றி பெறுகிறது. சமுதாயத்தில் கலப்பு மணத்தால் பிறக்கும் பிள்ளைகள், பெண்கள், திருமணத்தில் எவ்வளவு தூரம் வெற்றி பெறுகின்றார்கள் என்பது நன்கு கவனிப்பவர்கட்குப் புலனாகும்.

'இராஜாஜி' அவர்கள் மதி நுட்ப மிக்க ஓர் அரசியல் மேதை. அதைவிடப், பெரிய சீர்திருத்தவாதி, அவர் சீர்திருத்தம் செயல் முறையிலேயே எப்போதும் பரிணமிக்கும். வெகு காலத்திற்கு முன்னரே அவர் தம் புதல்வியைக் கலப்பு மணம் செய்து கொடுத்தவர். ஆனால் கலப்பு மணம் சில இடங்களில் தான் வெற்றி பெறும் என்று முன்னமே கூறியதுபோல் திரு. ஆச்சாரியார் தாம் செய்த கலப்பு மணத்தில் வெற்றி அடைந்தார். ஆனால் நாட்டில் நடைபெற்ற நடைபெறும், கலப்பு மணங்களிற் பல, வெற்றி பெறவில்லை.

இராஜாஜி அவர்களின் இந்தக் கலப்பு மணத் திட்டம் வெற்றி பெற வேண்டுமானால் அது பெருவாரியாக நடைபெற வேண்டும்; அப்படி நடந்தால் அக் கலப்பு மணத்தால் தோன்றும் மக்கள் மாபு, ஒரு தனிச் சாதியாக ஆகுவிடுமோ என அஞ்சுதற்கு இடமிராது. கலப்பு மணம் செய்து கொள்பவர்கட்கு அரசாங்கத்தில் சலுகையும் அவர்கள் மக்களுக்குக் கல்வி முதலிய வசதி அளிப்பதற்கான உறுதியும் அரசாங்கம் தர முன்வர வேண்டும்.

# சமாஜ விழா

தமிழகத்தில் ஐயர் பிள்ளை நாவலர் என்றால் அவை முறையே தமிழ்த் தாதா உ. வே. சாமிநாதய்யர், திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை M.A.,M.L., யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் ஆகியவர்களையே குறிக்கும். அவ்வளவுக்கு அவர்கள் தம் தொண்டுகளால் பெயரெடுத்திருந்தார்கள். அதுபோலவே 'சமாஜம்' என்றால் (வேறு பல சமாஜங்கள் இருந்தாலும்) அது சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தையே குறிக்கும்.

காதலனும் காதலியும் போன்று ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாத இணக்கமுடையவை சைவமும் தமிழும் என்று அறிஞர்கள் கூறுவர். பழந்தமிழ்ப் பண்பாடே பிறகாலச் சைவ சித்தாந்தச் செந்நெறியாக மலர்ந்தது என்றும் அவர்கள் பகர்வர்.

முப்பொருள் உண்மை கூறும் சித்தாந்த சைவத்தையும், செந்தமிழ் மொழியையும் பொது மக்களோடு தொடர்பு கொண்டு போற்றி இக்கால முறைப்படி அவற்றைப் பரப்பி ஓம்ப முற்பட்டுள்ள அமைப்புகளில் சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜம் சிறந்த தொண்டாற்றி வரும் ஒரு பழைய அமைப்பாகும்.

அதன் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் கருத்திருத்திய பெரியோர்கள் திருப்பாதிரிப்புலியூர் சிவத்திரு ஞானியாரடிகளும், ஆசிரியர் மறைமலை அடிகளுமாவர்கள். ஞானியாரடிகள்தாம் இறுதிக் காலம் வரை அவ்வமைப்போடு நெருக்கமாகத் தொடர்புகொண்டிருந்தார்கள். அண்மையில் மறைவெய்திய தமிழ்ப் பெரியார் திரு. வி. க. பண்டிதமணி முதலியவர்களும், காலஞ்சென்ற பேரறிஞர்கள் கொழும்பு சர். பொன்னம்பலம் இராமநாதன், நான்காவது மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவிய பாண்டித்துரைத் தேவர், சித்தாந்த நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும் ஆங்கிலத்தில் இதழ் நடத்தியும் மேலை நாட்டில் சித்தாந்தக் கருத்துக்களைப் பரப்பிய திரு. ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை; ஆயிரத்தெண்ணூறு ஆண்டுக்கு முற்பட்ட தமிழர் (The Tamils Thousand eight hundred years ago) என்னும் சிறந்த ஆங்கில ஆராய்ச்சி நூலை முதன் முதலில் எழுதிய யாழ்ப்பாணம் கனக சபைப் பிள்ளை, ஆசிரியர் மறைமலை அடிகள், கா. சுப்பிரமணிய பிள்ளை முதலிய பேறிஞர்கள் சமாஜத்தோடு தொடர்பு கொண்டு அதன் விழாக்களில் தலைமை ஏற்றும் அரிய பெரிய சொற்பொழிவாற்றியும் அதனை வளர்த்திருக்கிறார்கள்.

1945-ஆம் ஆண்டு முதல் கடந்த 48 ஆண்டுகளாகச் சமாஜம் சைவத்துக்கும் தமிழுக்கும் செயற்கரும் தொண்டுகள் பல வற்றைச் செய்திருக்கிறது.

ஆண்டுதோறும் பல்வேறு இடங்களில் ஈழ நாட்டிலும் கூட, சைவ மாநாடுகளை நடத்தியும், சித்தாந்த சாத்திரங்களையும், சங்க நூல்கள், சிந்தாமணி முதலிய பிற மதம் தழுவிய காப்பியங்கள் உள்ளிட்ட பல

---

அரசியலாரோடு மக்களும் ஒத்துழைத்தால் நம் நாட்டின் 'சாப'க் கேடான இந்தச் சாதி முறையை அடியோடு ஒழித்து விட முடியும்.

—நலங்கிள்ளி.

பஞ்சாட்சரத்தின் பொருள் அறிந்து, குரு உபதேசமாகப் பெற்று, பாவனை முகமாக இருந்தால் நடராஜர் தோன்றுவார். பஞ்சாட்சர பாவனையில் முதிர முதிர மந்திர ரூபமாகத் தோன்றியவர் ஒளி வழியாக அருள் கொடுக்கிறார். ஐந்து எழுத்துக்களின் வழியாகவே ஒளி வருகிறது. எந்தப் பஞ்சாட்சரத்தில், எந்த நாதத்தில் இருக்கிறோமோ அந்த ரேகை வழியாகவே அருளிச் செய்வார். நாத ரூபமாகப் பாவிப்பதுபோல விக்கிரகத்தில் பாவிக்கப் பாவிக்க இப்படிச் செய்வார் எனில், ஒலியைவிட ஒளி தாழ்ந்ததாதலின் அதற்கேற்ற பலனையே கொடுப்பார். ஒலி வழியாக வருவதே அவர் சிறப்புக்கு உரியது. ஆகாசம் ஒலித் தத்துவம் நிறைந்தது. மண் வாசனைத்தத்துவம்நிறைந்தது நீர் ருசித் தத்துவமும், நெருப்பு ஒளித் தத்துவமும், காற்று உணர்ச்சி (தொட்டால் தெரிவது) தத்துவமும் நிறைந்தது. ஒலியைக் கொடுக்க ஆகாசம் இருக்கிறது. இப்படியே ஐந்தும் ஐந்து வகை தெரிவிப்பதை உணரவேண்டும். ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு என்ற குறள் வாசகத்தை எண்ணிப் பார்த்து வாழ வேண்டும். ஒலியை மதித்து ஒலி வண்ணமாக மாறி ஆகாசத்தையும் மறந்து மேன்மேல் உயரவேண்டும். ஒலி வழியாக ஒளி வருவதைக் காண்கிறோமெனில் மேலான தத்துவத்தில் இருக்கிறோம் என்பதாகும். நீர் ஆற்றல் பெற்றவர் திங்கள் மண்டலத்தில் செயல் புரிவர். ஒவ்வொன்றின் ஆற்றலைப் பெற ஒவ்வொரு மண்டலத்திலும் செயல் புரியலாம். ஒவ்வொரு பூத ஆட்சியையும் பெற்ற பிறகு ஆகாச நிலை பெற்று நடராசராக மாறலாம்.

நமுதலாதி ஐந்தும் போய் ஆகாசமாகி ஒலி சிறக்க அம்பலவாணர் ரேகையில் தோற்றமளிக்க அவருளால் அருள் பாட்டு வருகிறது. இப்படிப்பட்டவர்களில் சிரேஷ்டரான ஞானியில் ஞானியாகிய மணிவாசகர், 'திருவாசகப் பொருள் இதுவே' என அம்பலத்தில் மறைந்தார். காரைக்காலம்மையார் இப் பொன்னம்பலத்தையும் விட்டு ரத்தின அம்பலத்தைச் சேர்ந்தார் எல்லாம் வல்ல பெருமானே, 'அம்மையே' எனில், அவருக்கு எப்படிப் பட்ட அம்பலம் வேண்டும்?

ஆதிரை என்பது நட்சத்திரப் பெயர். அஞ்ஞானத்திருப்போரை மெய்ஞ்ஞானத்திற்குக் கொண்டுபோவது ஆதிரையின் தன்மை. நடராஜரின் தன்மையும் இதுவேயாதலின் அவரும் ஆதிரையான் என அழைக்கப்படுகிறார். ஆதிரை நாளில் பிறவி நீக்கத்திற்குரிய காரியங்களைச் செய்யலாம். இந் நாளில் நடராஜ நடனம் நடக்கும். அவர், நடனத்தால் நினைவைப் பற்றிக்கொண்டிருப்பதால் மனம் உள்ள இடமாகிய நெற்றியில், கறுப்பு மையை ஒழுகுகிறமாதிரி இடுதலுண்டு. பாசங்களோடு போராடிய காரணத்தால் இப்போது களைப்பில் இருக்கிறோம். அவர் ஆதவினால் திருவாதிரைக் களி பெற வேண்டும். அருளமுதைச் சிறிதாகிலும் வாங்கிப் புசிக்க வேண்டும்.

வேதங்க ளாட மிகுஆ கமமாடக்
கீதங்க ளாடக் கிளரண்டம் எழாட
பூதங்க ளாடப் புவன முழுதாட
நாதங்கொண் டாடினன்
ஞானனந் தக்கூத்தே.

இங்கு நாதங் கொண்டு ஆடினன் என்னும் உண்மையைச் சிந்தித்து நாதத்தால் உயர வேண்டும்.

காளியோ டாடிக் கனகா சலத்தாடி
கூளியோ டாடிக் குவலயத் தேயாடி
நீடிய நீர்தீக்கால் நீள்வா னிடையாடி
நாளுற அம்பலத் தேயாடும் நாதனே.

நடராசர் நல்லவரோடு மட்டும் ஆடவில்லை. நல்லவரல்லாதாரோடும் ஆடுகிறார். நல்லவரோடு ஆடி நலங்களை அதிகப்படுத்துகிறார் கெட்டவரோடு ஆடிக் கெடுதிகளைப் போக்குகிறார்.

தேவரோ டாடித் திருவம் பலத்தாடி
மூவரோ டாடி முனிசனத் தோடாடி
பாவினுள் ஆடிப் பராசத் தியிலாடிக்
கோவினுள் ஆடிடுங் கூத்தப் பிரானே.

பாடுகிற பாட்டில் ஆடிப் பயன் கொடுப்பார் இந்த ஆட்டம் பராசக்தியின் ஆட்டந் தானே எனத் தோன்றும். அந்தச்

**Phone 55034. Tel. Enkayam**

**கைத்தறி ஆடைகளில்**
சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்

# பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு' சென்னை 1.

சக்தியினுள்ளும் ஆடுகிறார். அம்மை சக்தி அப்பன் சக்தி இரண்டும் ஒன்று எனச் சிலர் கூறுவர். இது தவறு. அப்பன் சூரியன்; அம்மை சந்திரன். இரண்டு சக்திகளும் ஒன்று சேர்ந்ததே அம்மையப்பர். அம்மை சக்தி வேறு அப்பன் சக்தி வேறு எனச் சைவ சமயத்தில்தான் நன்கு நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது.

உம்பரிற் கூத்தனை உத்தமக்
கூத்தனை
செம்பொற் றிருமன்றுட் சேவகக்
கூத்தனை
சம்பந்தக் கூத்தனைத் தற்பரக்
கூத்தனை
இன்புற நாடி என்
அன்பில்வைத் தேனே.

உலகில் பணி செய்கிறவரே அம்பலக் கூத்தனது திருவருள் பெறுகிறவர். அவர் சம்பந்தப் படாத உயிர் ஒன்றுகூட உலகில் இல்லை. சிலர் சம்பந்தம், பழகப் பழகப் புளிக்கும். இவர் சம்பந்தமோ எவ்வளவு பழகினும் தெவிட்டாததாயிருக்கும். எக் காரணங் கொண்டும் இடையில் நின்றுவிடாமல் தொடர்ந்து சேவையில் இருந்தால் இச் சம் சம்பந்தம் கை கூடும்.

அஞ்ஞானத்தை அழிப்பவர் என்பதால் முயலகனைத் தாளில் அழுத்துவது போல இருக்கிறார். அழிப்பில் உடந்தையா யிரோன் என அம்பிகை தூர நிற்கிறாள். அப்பன் ஆற்றல் அழிக்கும் ஆற்றல், அம்மை ஆற்றல் அருளும் ஆற்றல். அழிப்புக் காலத்திலும் இரக்கம் இருக்கிறதே என அம்மை அப்பனை விரும்புகிறாள். இதனால் பக்கத்தில் இருந்து கொண்டு சிவத்தைக் காண்பிக்கிறவளாக இருக்கிறாள். சிவகாமியாக இருக்கிறாள். நடராசரைப் பார்க்கும்போது இந் நிலைகளை எண்ணிப்பார்க்கவேண்டும்.

நாம் வாங்கும் மூச்சு நுரையீரலில் போகாமல் கீழ் மேலாக வராது. நுரையீரலோடு மட்டும் போய் வந்துவிடும் என்பது இல்லை. சிலருக்கு இதயப் பண்பு இல்லாமலே சுற்றிவரும், உணர்ச்சிப் பெருக்கம் இல்லையெனில் சும்மா சுற்றிவரும். உணர்வுவளத்தோடு சுற்றவேண்டும்என்பதற்காக மந்திர உச்சரிப்போடு மூச்சு விடவேண்டும். மந்திர மூச்சு தெய்வத் தன்மையில் நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் இருதயமே நடராசரின் இடம். நம் உடல்பில் கருவி காரணங்களில் ரத்தத்தில் பிராணன் கலப்பது நடராசரின் இயக்கத்தினுலேயாகும். இருதயந் தன்னில் எழுந்த பிராணன் கை கால்களில் நன்றாய்க் கலக்கும்படி செய்து ஆசிரியனுயிருந்து உதவுகிறான். குருமூலமாக பஞ்சாட்சர உபதேசம் பெற்றுக் குருட்டுத் தனமின்றி அன்பாய்ப் பயன்படுத்தினால் ஐந்தொழில் புரியுந் தன்மை கொடுக்கிறார் இச் சந்தர்ப்பம் நமக்கு இருக்கிறது. இதை உயர்வகையில் கொண்டு போகாமல் சிலர் இடையிலேயே நின்றுவிடுகின்றனர்.

இங்கு வாழ்கிறவருக்கு இறைவனின் ஆகாச நடனம் இயல்பாக நடக்கிறது. இங்கு உள்ளவர் இறைவனின் அசைவை எளிதில் பெறும் ஆற்றல் மிகுந்தவராயிருப்பர். இவ்வசைவைப் பெறுதல் மிகுந்த காரியப்பாடுள்ளது. மனிதப் பிறவி எடுத்த நாம் அம்பலவாணர் திருவடிக் கீழ் அமர்ந்து இருக்கவேண்டும். இந்த முறையில் நம் வாழ்வை உயர்த்தி அவன் அருள் பெறுவோமாக!

(முற்றும்)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

போன்றவை) படமெடுத்து ஓரிடத்தில் தொகுக்க!

5 இக் குறளுக்கேற்ற தகு மாதருலகம் பின்னும் தோன்றுமாறு சிறு பெண் குழந்தையிலிருந்தே வளர்ப்பும் கல்வியும் பழக்கமும் அமையுமாறு பெண் குழந்தைகள் பெண்முதியோர் நிலையங்களை நன்கு அமைத்து நடத்துக!

6 வெளியிலுள்ள மாதருலகத்துக்கும் அவ்வப்போதும் கண்காட்சிகள், எழுத்துக்கள், பேச்சுக்கள், இதழ்கள் வாயிலாக வேண்டும் திருத்தொண்டுகள் செய்து வருக!

7 இவைகட் கேற்றபடி பெண் கல்விச் சிறப்புகளை நாடெங்கும் மிகுத்துவர ஊக்கமும் ஆக்கமும் திருத்தமும் உதவி வருக!

IX "சிறைகாக்கும் .......தலை" என்னுங் குறள் மாதர் உரிமையை வற்புறுத்தலால் பெண்ணுரிமைக்கான கிளர்ச்சி புரட்சி இயக்கங்கள் பலவும் அடக்கமான காரியவுருவான முறையில் நிகழ்த்தி வருக!

ஒவ்வொரு மாதினிடமும் அமைந்துள்ள இயற்கை ஆற்றல் பெருகி எழுதற்கு அமைப்புகள் செய்வித்து, அதற்கு எவ்வகைத் தடையும் சமுகத்தில் இல்லாத படி உதவிகள் செய்க!

இது உரிமையின் அடையாளமாதலை வரலாற்றுண்மைகளுடன் விளக்குக!

X கணவன் உள்ளத்தைத் தம் நன்னடைக்கையாற் கவர்ந்து கொண்ட மாதர் பெருமைகளையும், அவர்கட்கு அமருலகச் சிறப்புகள் உண்டாதலையும் எடுத்துக் காட்டுக!

அமருலகச் சிறப்புகளை அறிவியன் முறையில் இயன்றவரை விளக்க முயலுக!

திருக்குறட் செயல் முறை:

# வாழ்க்கைத் துணை நலம்

## (இல்லாளது நன்மை)

செய்கைகள்:

I இல்லாளுடைய நன்மைகளைத் தொகுக்க: (எ-டு).

நன்மைகளாவன:

1 மனைத்தக்க மாண்பு.
2 தற்கொண்டான் வளத்தக்காள்.
3 கற்பென்னும் திண்மை.
4 கொழுநன் தொழுதெழுவாள்.
5 தற்காத்தல்.
6 தற்கொண்டாற் பேணுதல்.
7 சொற்காத்தல்.
8 சோர்விலாமை.
9 நிறை காத்தல்.
10 பெற்றான் பெறுதல்.
(கணவன் மகிழ்ச்சியைப் பெறுதல்; அதற்கேற்ப இணங்கி ஒழுகுதல், உழைத்தல், அமைதல்)
11 புகழ் புரிதல் (தொண்டுகளால் புகழ் பெருக்கல்)
12 நன்மக்கட் பேறு.

இந்நன்மை ஒவ்வொன்றையும், இவை நன்மைதாம் என்பதை நிறுவி, வரலாற்றுச் சான்றுடன் விளக்கப்படங்களுடன் விளக்கல்.

II மனையாள் நன்மைகளில் எதனால் எப்பயன் என்பதையும் புலப்படுத்துக: (எ-டு)

1 மனைத்தக்க மாண்பு
2 தற்கொண்டான் வளத்தக்காள்

(இவற்றால் வாழ்க்கைத் துணையாயிருக்கும் பொருத்தம் உண்டாகும்; வாழ்க்கை மாட்சிமைப்படும்; வளப்படும்; நன்மக்கள் பெறுவர்.)

3 கற்பென்னும் திண்மை
4 கொழுநன் தொழுதெழுவாள்

(இவற்றால் பெருங் குணம் என்னும் பெருந்தன்மை விளையும்; மழை பெய்விக்கும் ஆற்றல் உண்டாகும்.)

5 தற் காத்தல்
6 தற்கொண்டாற் பேணுதல்
7 சொற் காத்தல்
8 சோர்விலாமை

இவற்றால் பெண்மை ஆற்றல் ஓங்கும்; குடும்பம் சிறப்புறும்.

9 நிறை காத்தல்
(இதனால் பாதுகாப்பு இயல்பாகவே அமையும்.)

10 பெற்றாற் பெறுதல்
(அமரர் உதவியும் மதிப்பும் கிடைக்கும். அதாவது, புத்தேளிர் உலகிற் பெருஞ் சிறப்பு உண்டாகும்.)

11 புகழ் புரிதல்
(இதனால், கணவனுக்கு ஏறு போற் பீடுநடை பெருகும்.)

12 நன்மக்கட் பேறு
(குடும்பம் மங்கலமும் நன்கலமுமாய் விளங்கும்.)

III நல்ல மனைவி அமைந்த குடும்பங்கள் சிலவும், அல்லாத குடும்பங்கள் சிலவும் வரலாற்றுச் சான்றாகவும், அல்லாத, நூல்களின் சான்றாகவும் எடுத்து விளக்கிச் சித்திரப் படங்களுடன் அமைக்க!

IV கற்புடைமையின் பகுதிகளை நடக்கைகளை விளக்குக! கற்புடையார் யார் யார் என்பதற்குப் பண்டைச் சான்றுகளிலிருந்து பட்டிகள் தொகுக்க!

V கற்புடை மாதர் இயற்றிய செயற்கருஞ் செயல் பலவும் எடுத்துக்காட்டுக! அவர்கள் இயங்கிய வகைகளையும் எடுத்துக்காட்டுக!

VI மழை பெய்விப்பதற்கும் கற்புக்கும் என்ன தொடர்பென்பதையும் அதற்குரிய நிகழ்ச்சிகளையும் விளக்குக!

VII இயலுமேல், இக்காலத்தில் அல்லது அண்மைக்காலம் வரையில் விளங்கும் விளங்கிய கற்புடை மாதராரையும், அவர்களால் குடும்பமும் நாடும் நலமடைந்து வருதலையும், அவரவர் நிழற் படங்களுடன், அவரவர் குடும்பநிகழ்ச்சி செயல்நிகழ்ச்சிகளின் நிழற்படங்களுடன் எடுத்துக்காட்டி நாட்டவரை ஊக்குக!

VIII 1 "தற்காத்து ....பெண்" இக் குறளுக்கேற்ற பெண்டிரைத் தொகுத்து ஆண்டுதோறும் பல்வேறு வகைகளிற் சிறப்பித்து விழாக்கள் கொண்டாடுக! முற்காலப் பெண்டிரைப் படங்களாலும் எழுத்துக்களாலும் சிறப்பிக்க.

2 மேற் சொன்ன குறளுக்கேற்ற சிறப்புடைப் பெண்டிர்க்கு உருவச்சிலைகள் நிறுத்திய ஒரு பூங்கா அல்லது திருக்கோயில் அமைக்க.

3 இக்காலத்துத் தக்கமாதர் சிலரை அவ்வமைப்பில் ஆட்சியாளராக மேற்பார்க்கச் செய்து அவர்கள் ஆற்றலைப் பெருக்குக!

4 தமிழ் நாடு முழுதும், நாவலந்தீவு முழுதும், உலக முழுதும் விளங்குகின்ற நன்மாதர் சின்னங்களை (கண்ணகி கோயில், வாசுகி கோயில்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம் குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)